பரம்பிக்குளம்–ஆழியார் பாசனத்தைச் சேர்ந்த காங்கேயம், பொங்கலூர் தொகுதிகளில் சென்ற ஆண்டு தண்ணீர் விடப்படாததால் தண்ணீர்த் தீர்வையை நிறுத்தி வைக்க வேண்டும் என்பது குறித்து.

1973 ஆகஸ்ட் 14]

4. அறிவிப்பு.

ஓய்வுபெற்ற பேரவைச் செயலாளர் திரு. கா. து. நடராசன் அவர்களது கடிதங்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இப் பேரவையின் முன்னாள் செயலாளர், திரு. கா. து. நடராசன் அவர்களது பணியைப் பாராட்டி இம்மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு நன்றி தெரிவித்து அவர் கடிதம் எழுதியுள்ளார். இக்கடிதமும், அவர் தாம் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதாக முதலில் எழுதிய கடிதமும் பேரவையின் நடவடிக்கைக் குறிப்பு இணைப்பில் சேர்க்கப்படும்.*

5. அறிக்கை அளித்தல்.

1969–70-ம் ஆண்டுக்கான பொதுக்கணக்காய்வுக் குழுவின் ஒன்பதாம் அறிக்கை.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவர் அவர்களே, 1969–70-ம் ஆண்டின் தமிழ்நாட்டிற்கான கணக்குகளின்மீது மேற்படி குழுவின் ஒன்பதாம் அறிக்கையை (பகுதி 2) அளிக்கிறேன்.

6. தனியார் அலுவல்கள்

சட்ட முன்வடிவு—

(i) தமிழ்நாடு 1973ஆம் ஆண்டு வரதட்சணைத் தடுப்புச் சட்ட முன்வடிவு.

THIRU N. K. PALANISAMY : Sir, I move—

"That leave be granted to introduce the Tamil Nadu Dowry Prohibition Bill, 1973."

The motion was put and carried and leave was granted.

THIRU N. K. PALANISAMY : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(ii) தனித் தீர்மானம்.

அரசியலமைப்புக்கு முரணாக, அமைச்சரவைக்குக் களங்கம் ஏற்படுத்தும் முயற்சிகளைக் கண்டித்தல்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 5—4—1973-ம் நாள் அன்று திரு. எம். ஏ. லத்தீப் அவர்களால் முன்னுரைக்கப்பட்ட தீர்மானத்தின்மீது மேலும் விவாதம் தொடரும்.

---

* 392–395ஆம் பக்கங்களில் இணைப்புகள் V, VI ஆக சேர்க்கப்பட்டுள்ளன.